விலை ரூபா 1-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 29 தை 24 ஐ. ஆகிர் பிறை 18 இதழ் 253

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 7-2-1988

## தமிழகத்தின் புதிய அரசு இலங்கை–இந்திய ஒப்பந்தத்தை ஏற்க மறுத்தால்?

### புதிய ஆளுநர் பேட்டி

(லண்டன்)
''தமிழகத்தில் புதிதாக ஆட்சி அமைக்கும் கட்சி இலங்கை - இந்திய சமாதான ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளாவிடினும் அக் கட்சியின் ஆட்சிக்கு பங்கமேற்படாதவகையில் ஜன நாயக வழிகளை கடைப்பிடிப்போம். இதனையே மத்திய அரசும் மேற்கொள்ளும்'' இவ்வாறு தமிழகத்தின் புதிய ஆளுநர் திரு பி ஸி. அலெக்ஸாண்டர் பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

இப் பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில்: தமிழகத்தில் எவ்வளவு விரைவில் தேர்தல் நடாத்த முடியுமோ அவ்வளவிற்கு முயற்சிகளை மேற்கொள்வேன் என்றும் ஜனதிபதி ஆட்சி நடைபெறும் காலம் வரை மக்களின் குறைகளைத் தீர்ப்பதில் முக்கிய கவனம் செலுத்தப்படுவதுடன் தமிழகத்தில் அகதிமுகாம்

(5ம் பக்கம் பார்க்க)

# ● வெளிநாடுகளில் தஞ்சம் கோரியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் உடன்திரும்பும்சாத்தியமில்லை!

நமது வெளிநாட்டு செய்திச் சேவை

**உலக நாடுகளில், குறிப்பாக மேற்கு ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் கோரியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் உடனடியாகத் திருப்பி அனுப்பப்படும் சாத்தியம் இல்லை என்று ராஜீய வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றன.**

இலங்கைத் தமிழர்களை நாடுகடத்த பிரிட்டன் முழுமூச்சாக அக்கறை கொண்ட போதிலும்; பிரிட்டனின் வழியைப் பின்பற்றும் நிலையில் ஏனைய ஐரோப்பிய நாடுகள் தயாராக இல்லை என்று மேற்படி வட்டாரங்கள் கூறுகின்றன.

பிரிட்டனில் அகதிகள் அந்தஸ்து கோரி விண்ணப்பித்த இலங்கைத் தமிழர்களில் ஆறு பேரின் விண்ணப்பங்கள்கடந்த வாரம் நிராகரிக்கப்பட்டு, அவர்களை உடனடியாகத் தாயகம் திருப்பி அனுப்ப பிரிட்டிஷ் உள்ளூராட்சி அமைச்சு செயலாளர் டக்ளஸ் ஹேர்ட் உத்தரவிட்டது தெரிந்ததே.

இந்தக் 'கடும்' நடவடிக்கையை ஏனைய நாடுகளும் பின்பற்றலாம் என்று உடனடியாகவே எதிர்பார்க்கப்பட்டது.

குறிப்பாக; மேற்கு ஜெர்மனி, பிரான்ஸ், சுவிற்சர்லாந்து, டென்மார்க்,நோர்வே ஆகிய நாடுகள் பிரிட்டனைப் பின்தொடரலாம் என்று கருதப்பட்டது. ஆனாலும் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் நிலவும் கருத்துக்கள் இதற்குச் சாதகமாக இல்லை என்று அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் சுமார் ஒரு லட்சம் இலங்கைத் தமிழர்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

### ஐ. நா. சாதகமில்லை

பிரிட்டனின் தீர்மானம் பற்றி அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் கமிஷன் அதிகாரி ஒருவ கருத்த வெளியிடுகையில்; வெளிநாடுகளில் தஞ்சம் கோரியிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகள் நாடு திரும்புவது இன்னும் பாதுகாப்பாக இல்லை என்று தெரிவித்துள்ளார்.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் கமிஷனின் யோசனைகளை ஐரோப்பிய பொருளாதார சமூகம் இதுவரை பின்பற்றி வந்தது என்பதும், அகதிகள் விஷயத்தில் ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகள் மேற்படி ஐ நா. கமிஷனுக்கு முக்கியத்துவமளித்து அதன் வழி காட்டலை ஒட்டியே நடந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாணத்திலிருந்து 26 குடும்பங்கள் திருமலை திரும்பின

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த 26குடும்பங்களைச்சேர்ந்த 96 திருமலை அகதிகள் நேற்று தமது சொந்த இடங்களுக்கு புறப்பட்டுச்சென்றனர்.

இவர்களுக்கு இந்திய அமைதிப்படையின் சார்பில் நகர அதிகாரி பிரிகேடியர் ஆர். ஐ எஸ். சாலோன் தலா 100 ரூபாயும் இரண்டு பைக்கட் பிஸ்கட்டுகளும், பால் மாவும் வழங்கி வழியனுப்பிவைத்தனர். இக்குடும்பங்களுக்கு கிறிஸ்தவ ஸ்தாபனம் ஒன்று தலா 100 ரூபாய் கொடுத்துதவியது.

## திருமலை, மட்டக்களப்பு பஸ்சேவை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை மட்டக்களப்பு ஆகிய பகுதிகளுக்கான பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையினுல் நடத்தப்பட்டு வந்த இச்சேவைகள் நாட்டிலேற்பட்ட நெருக்கடி நிலையினுல் இடைநிறுத்தப்பட்டிருந்தது தெரிந்ததே.

யாழ் மத்திய பஸ்நிலையத்திலிருந்து காலை 7-00 மணிக்கு திருமலைக்குபஸ்புறப்படும். திருமலையிலிருநது தினமும் காலை 6-30 மணிக்கு யாழ்ப்பாணத்திற்கான பஸ்சேவை நடைபெறுகின்றது. இச்சேவைக்கானகட்டணமாக ரூபா 39-50 சதம் அறவிடப்படுகின்றது.

மட்டக்களப்பு பஸ் சேவை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது. இச்சேவைக்கான கட்டணம் ரூபா 100-

பருத்தித்துறை திருமலை பஸ் சேவை நடைபெற்று வருவதும் தெரிந்ததே.

## தமிழக சட்டசபைத் தேர்தல்: இந்திரா காங்கிரஸின் முடிவு விரைவில் வெளியாகும்

[புதுடில்லி]
தமிழகத்தில் நடைபெறவிருக்கும் சட்டசபைத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் தனித்து போட்டியிடுமா அல்லது எக்கட்சியுடனும் கூட்டமைப்பு ஏற்படுத்துமா என்பதுபற்றி விரைவில் மேலிடம் முடிவெடுக்குமென கட்சிப்பிரமுகரும் கேரள முன்னுள் முதலமைச்சருமான திரு. கருணுகரன் தெரிவித்துள்ளார்

தமிழகத்தில் கடந்த ஆட்சியின்போது இந்திராகாங்கிரஸ் அ. தி. மு. கவுடன் கூட்டமைப்பு ஏற்படுத்தியதுடன் சட்டசபையில் பிரதான எதிர்க்கட்சியாகவும் அங்கம் வகித்தது. தற்போது அ. தி. மு. க. வில் ஏற்பட்டபிளவையடுத்து இந்திராகாங்கிரஸின் நிலைப்பாட்டில் மாறுதல் ஏற்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் தமிழகத்திற்கு திடீர் வஜயமொன்றை மேற்கொண்ட திரு. கருணுகரனும் கட்சிப் பொதுச்செயலாளரில் ஒருவருமான திரு. சிங்கும் தமிழகஇந்திராகாங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுடன் முக்கிய மாநாடொன்றை நடத்தியுள்ளனர். இதன்பின் புதுடில்லியில் பத்திரிகையாளரை சந்தித்தபோதே திரு. கருணுகரன் இக்கருத்தைத் தெரிவித்தார்.

தமிழகத்தில் இம்முறை இந்திரா காங்கிரஸ்- ஜெயலலிதா அணியின் கூட்டமைப்பு ஏற்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. (சி)

## இலவச உணவுப் பொருள் விநியோகம்

[கோப்பாய்]
கோப்பாய் தெற்கு பழைய வீதியைச் சேர்ந்த 400 குடும்பங்களுக்கு அண்மையில் சர்வோதயத்தினுல் இலவசமாக உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டன.

## 3 மாதங்களுக்குமேல் உதவிப்பணம் இல்லை

### ஏழைகள் அவதி

(அலுவலக நிருபர்)
வசதிகுறைந்த ஏழை மக்களுக்கு மாதாந்தம் அரசினுல் வழங்கப்பட்டுவரும் உதவிப் பணம், யாழ் குடாநாட்டிலுள்ளவர்களுக்குகடந்த 4மாதங்களுக்குமேலாக வழங்கப்படவில்லை. இதனுல் இந்த மக்கள் சொல்லொணுக் கஷ்டத்துக்காளாகியுள்ளனர்

வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழும் வயோதிபர்கள் விதவைகள்,ஊனமுற்ருேர்,செவிப்புலன் கட்புலனற்ருேர் இந்த உதவிப் பணத்தைப் பெற்றுவருபவர்களுக்குகடந்த 87 அக்டோபர் மாதத்துக்குப் பின்னர் உதவிப்பணம் வழங்

(6-ம் பக்கம் பார்க்க)

## இந்திய அமைதிப்படையின் தளபதி------ திபேந்தர்சிங் ஓய்வுபெறுகிருர் சட்டர்ஜி நியமனம்

[புதுடில்லி]
இந்திய தென்பிராந்திய இராணுவத் தளபதியும் இலங்கையில் இயங்கும் இந்திய அமைதிகாக்கும் படையின் தளபதியுமான லெப். ஜெனரல் திபேந்தர்சிங் இம்மாத முடிவில் தமது பதவியிலிருந்து ஓய்வுபெறுகிருர்.

அமைதிப்படையின் புதிய தளபதியாக லெப். ஜெனரல் ஏ. கே. சட்டர்ஜி நியமிக்கப்பட்டுள்ளார். இவர் மார்ச் முதலாம் திகதி பதவியேற்பாரென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இந்திய அமைதிப்படையின் வழிநடத்தல் நடவடிக்கை குறித்து இந்திய லெப்டினன்ட் ஜெனரல் குடியரசு தினத்தன்று திபேந்தர்சிங் இராணுவ உயர் விருதான 'பரம்வீரச்சக்கரா' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். ஜெனரல் திபேந்தர்சிங் பஞ்சாப் மாநிலத்தை சேர்ந்த சீக்கிய மதத்தைச் சேர்ந்தவர். [சி]

## ஆணின் சடலம்: மனைவி அடையாளம் காட்டினுர்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் நாவலர்வீதி-கோவில் வீதிச் சந்தியில் இரத்தக்காயங்களுடன் சடலமாகக் கிடந்தவர். கோவில் வீதியைச்

(6ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

Sony T.V Colour 28'' Automatie உடனடி விற்பனைக்குண்டு, வ திருசெல்வராஜா, நந்தாவில் அம்மன் கோவிலடி, கோண்டாவில். சி-2012

சிறுவர்களுக்கான புதிய நூல்கள் மற்றும் பல அரிய நூல்கள் தற்போது வந்து விற்பனையாகின்றன. பூபாலசிங்கம் புத்தகசாலை, (புத்தகப் பகுதி) இல 15/3, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். ஏ-2500

"கார்த்திகை காய்" மீண்டும் சேகரம் செய்கின்றோம் கதிரேசன் அன் கம்பனி, 28, குமார வீதி, கொழும்பு 11. சி-1858

Prima Quality Chicks—Lohmann வெள்ளை. சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், புறேயிலர் குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் Hy Line கறுப்புபேட்டுக்குஞ்சுகள் வெள்ளிக்கிழமை சனிக்கிழமைகளில் விநியோகிக்கப்படும். உடன்பதிவு செய்யவும் Nallur Form Centre, C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர்லேன், நல்லூர் சி-2063

நல்லஇன [பிறிமா] புறெயிலர் குஞ்சுகள் பேட்டுக் குஞ்சுகள் மற்றும் புறெயிலர்கோழிகள் எம்மிடம் பதிவு செய்து கொள்ளலாம். 10ம்திகதிபுதன் கிழமை விநியோகிக்கப்படும். தொடர்பு; S M காட்வெயர் 11/6, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் முத்துக்குமாரு. 802, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். சி-2068

பாவித்த வீட்டுத் தளபாடங்கள், அல்மாரி, கட்டில், Show Case, சிறிய பெரிய கபேட்கள், பித்தளை, சில்வர் பொருட்கள், கண்ணாடி மேசைகள், Rice Cook.r, Toaster, கடை சோசேஸ், Baby Cot, ஹோல் செற், குசினிப்பொருட்கள் மற்றும் பல மலிவுவிலையில் உடன் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன், 326. பிரதான வீதி, யாழ்ப்பாணம். [சி 2074]

ரெலிவிசன் ரியூப், ரியூனர், Fly Back வீடியோ டெக், மோட்டர், வீடியோ செட் மற்றைய உதிரிப்பாகங்கள் உடன்விற்பனைக்குண்டு. பெறமுடியாத உதிரிப்பாகங்கள் ஓடர்களிற்கு பெற்றுக்கொடுக்கப்படும். விபரங்கட்கு Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி, [றெயில்வே கடவையருகாமை] யாழ்ப்பாணம். சி-20.7

Kandy Uplands Farm Ltd கோழிக்குஞ்சுகள் 18-2-88வியாழக்கிழமை காலை விநியோகிக்கப்படும். லோமான் பிறவுண் [ஜேமன்] பேட்டுக் குஞ்சு ரூபா 12-50, லோமன் சேவல் ரூபா 4-00 முன்கூட்டியே உடனே பதிவுசெய்து கொள்ளுங்கள். தொகையாக எடுப்பவர்களுக்கு விஷேச சலுகை உண்டு S. Godwin, No 09, Kandiah Lane, Chunnakam East, Chunnakam. [ஸ்டேசனுச்கு அருகாமையில்.] சி-2032

எல்லா இன கோழிக்குஞ்சுகளும் 1988 பெப்ரவரியிலிருந்து விநியோகிக்கப்படும். முன்கூட்டியே முற்பணம் செலுத்தி பதிவு செய்யவும். பதிவு செய்யும் இடங்கள்: R. S. K Farm, Muruga Pathy, Uduvil. 2. குபேரன் ஸ்டோஸ் கே. கே. எஸ். றோட், கொக்குவில் சந்தி, கொக்குவில். 3. கவுரிபேரோஸ் ஸ்ரோஸ், ஆஸ்பத்திரிவீதியாழ்ப்பாணம். 4. Farm house, கோட் றோட், மல்லாகம். 5 Red Rose Farm, தெளியெம்பை, வல்வெட்டித்துறை. 5 கோகிலா கூல்பார், கொடிகாமம். சி-2009

## விற்பனைக்கு

ஆனைக்கோட்டை கூளாவடியில் சகல வசதிகளுடனும் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு தொடர்பு: நியூ ராஜன் சலூன் சுன்னாகம். (சி 2095)

மொறிஸ் ஒக்ஸ்போட்கார், பிறவுண் நிறமுடையது. 8 Sri தொடர் அற்புதமான நிலையில். பார்வையிடும் இடம் உதயன் காரியாலயம் 292/2, நாவலர் றோட், யாழ்ப்பாணம். ஏ-2519

தொடர் மதிப்பீட்டுப் படிவங்கள்விற்பனைக்குண்டு பாடசாலைகட்கு மட்டும் மொத்தமாக வழங்கப்படும். செட்டியார் அச்சகம், யாழ்ப்பாணம். சி-2005

வீடுகட்டுவதற்கு ஏற்ற 1¾ பரப்புக்காணி கந்தர்மடத்தில் விற்பனைக்குஉண்டு தொடர்பு கொள்க: 111, அரசடி வீதி, யாழ்ப்பாணம். சி-2088

சாப் 20'' கலர் ரீ. வி, K. D K பெடெஸ்டல்Fபான், றெமிங்ரன் ஆங்கில தட்டச்சு, சீம்மர் சக்கரநாற்காலி, தஞ்சாவூர் சுருதிப்பெட்டி. அண்டவூட் போட்டபிள் ஆங்கில தட்டச்சு, குசன் செற்றி 6 உருப்படி, தொடர்பு: நிர் 180, நாவலர் வீதி, பிறவுண் றோட்சந்தி, யாழ்ப்பாணம். அல்லது302/1. நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். சி-2055

லவ் பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. தொடர்பு 114 3-ம் குறுக்குத்தெரு மணிப்புரி கொழும்புத்துறை. [சி 2081]

புத்தம் புதிய Commodore64 Computer Keyboard, Disk-Drive, Dotmatrix Printer ஆகியவை உடனடியாக விற்பனைக்குண்டு- விபரங்களுக்கு ஜெயரத்தினம் 626 / 11, கே. கே. எஸ் வீதி யாழ்ப்பாணம். [சி 2082]

மெய்கண்டான் திருக்குறட் கலண்டரும், மெய்கண்டான் பஞ்சாங்க மாதக்கலண்டரும் தொகையாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: மெய்கண்டான் அச்சகம், 144, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி 2084

## வாடகைக்கு

திருநெல்வேலி சந்தியிலிருந்து யாழ்நகர் நோக்கி 50 யார் தூரத்தில் இரண்டுகடைகள் கட்டக்கூடிய இடம் வாடகைக்குண்டு. விபரங்கட்குத் தொடர்பு; த. பரமேஸ்வரர் மே/பா ஞானசுந்தரம், கலைவாணி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு. சி-2069

எல்லா வசதிகளுடன் கூடிய வீடு உடன் வாடகைக்குண்டு நேரில் தொடர்புகொள்ளவும்: 60, அரசடி றோட், யாழ்ப்பாணம். சி-2098

யாழ்நகரில் 2ம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த Christ Church கு முன்பாக பிரதான வீதிக்கருகில் அமைந்துள்ள வீடுகள் வாடகைக்கு விடப்படும் தொடர்புகொள்ளவும்: No 25 Vembadi Road, Jaffna. சி-20 0

3-ம் கட்டையடி பருத்தித்துறைவீதி யாழ்ப்பாணத்தில் சகல வசதிகளுடன் வீடுவாடகைக்கு உண்டு. தொடர்பு: திருமதி தருமலிங்கம், புதுச் செம்மணி வீதி, நல்லூர் வடக்கு. [சி 2048]

## சேவை

Motors-உங்கள் வாட்டபம் வேலைசெய்யவில்லையா? நீர் இறைக்கவில்லையா? சேவிஸ் செய்யவேண்டுமா? நாங்களே வந்து கபட்டித்திருத்தி உடன் நீர்இறைக்கச் செய்வோம். Omega, Manipay Road, Jaffna. சி-2013

## தேவை

சமையல்காரர் தேவை. இருபாலாரும் நேரில் தொடர்பு கொள்ளவும்: 292/2, நாவலர் றோட், யாழ்ப்பாணம். ஏ-2520

யாழ்ப்பாணம் றோயல் டிஸ்பென்சறிக்கு நல்ல ஆங்கில கணித அறிவுள்ள பெண் விற்பனை உதவியாளர்கள் உடன் தேவை. நேரில் வரவும் றோயல் டிஸ்பென்சறி 270, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம். (சி 2094)

மின்தறி நெசவாலைக்கு வாப் ஓடுபவர் [Warper] பொருத்துனர் தேவை. நேரில்வரவும் ஸ்ரீ ராஜ் ரெக்ஸ் இன்டஸ்றீஸ். வட்டுகிழக்கு, சித்தன்கேணி [சி 2061]

நெல்லுக்குற்றும், மிளகாய் அரைக்கும் மில்லுக்கு சகல வேலைகளும் தெரிந்தவரும் பெண் காசாளரும் உடன் தேவை. கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும். தங்குமிட வசதியும் உண்டு. நேரில் அல்லது கடிதம் மூலம் விண்ணப்பிக்கவும். சாந்தி மில், வட்டுக்கோட்டை. [சி 1986]

யாழ் நகரில் வர்த்தகம் செய்யும் ஒருவருக்கு வீடு தேவை. வாடகையாயினும், ஒத்திகையாயினும், விற்பனைக்காயினும் ஏற்றுக்கொள்ளப்படும். வண்ணார்பண்ணை சுற்றுடல் விரும்பத்தக்கது தொடர்பு: கோபாலகிருஷ்ணன், 187/1, மானிப்பாய்வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (சி2051)

யாழ் நகரில் வர்த்தக ஸ்தாபனமொன்றிற்கு அனுபவமிகக பெண் லிகிதரும், கடிகாரம் திருத்துனரும் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது தொடர்பு: விளம்பர இல 2052, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [சி2052]

அனுபவம் வாய்ந்த அச்சுக் கோப்போர், ஒட்லி சிலிண்டர் மெஷின்இயக்குநர், உதவி ஆசிரியர்கள், அலுவலக உதவியாளர்கள், வெளிக்கள உத்தியோகத்தர் தேவை. தகுதியான இருபாலாரும் நற்சான்றிதழ்களுடன் நேரில் சமுகந்தரவும், தி. மாணிக்கவாசகர், பணிப்பாளர், நம்நாடு இன்வெஸ்ற்மென்ற் புறெஜெக்ற், சுன்னாகம். (சி 2099,

15 வயதிற்கும் 22 வயதிற்கும் உட்பட்டபையன் ஹோட்டல்சப்பிளைவேலைக்குத்தேவை. வயது கூடியவராயிருப்பின் ஹோட்டல் அனுபவமுடையவராயிருத்தல் நன்று மாநகர சபை எல்லைக்குள் இருப்பவர் அல்லது உரிமையாளரின் வீட்டில் [தற்போதைய சூழ்நிலையால்] தங்கியிருந்து வேலை பார்க்கக் கூடியவராயும் நற்குணம், நற்பண்புடையவராயும் இருத்தல் வேண்டும் வேலைக்கு ஏற்றபடி ஊதியம்வழங்கப்படும். விபரங்கட்கு உடனடியாகத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: சாம்பவி ரேட்ஸ்சென்ரர், நம்-46, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். சி-2085

மதி அக்கடமி.
ஊரெழு
O/L கணிதம் - துரித மீட்டல்
சர்மா
அதிபிரபல ஆசிரியர்
தினசரி: பி. ப. 4 00 மணி
(சி 2077)

## வகுப்புகள்

108, Brown Rd, Jaffna. A/L 88 இரசாயனம் மீட்டல் ஆசிரியர் சத்தீஸ் ஆரம்பம்; 12-2-88 (வெள்ளி) 5-15 p. m முழுப்பாடத்திட்டமும் கற்பிக்கப்படும். (திங் செவ். புதன், வியா, வெள்ளி 5-15 — 6-15 p. m.) (சி 2100

கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் விசேட முறைகள் மூலம் கற்பிக்கப்படும் O/L ஆண்டு 10. 9, 8, 7, 6 பட்டதாரி 85. சிவன்கோவிலடி திருநெல்வேலி. [சி 2038]

108, Brown Rd Jaffna, A/L 88 இரசாயனம் மீட்டல் ஆசிரியர் சத்தீஸ். ஆரம்பம்: 10-2-88 (புதன்) 7-15 a m முழுப்பாடத்திட்டமும் கற்பிக்கப்படும், திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி 7-15 a. m. (சி 2101)

பௌதிகவியல் G C. E (A/L) 88 ஆரம்பம்: 1 புலங்கள் [சனி, ஞாயிறு] 7-15a m -8-30 a m , 2மீட்டல் வகுப்பு [சனி ஞாயிறு] 10-30 a. m ஆசிரியர், N பத்மநாதன் B Sc [Hons] நாகலிங்கம் இன்ஸ்ரிடியூட் திருநெல்வேலி சி-2073

G S Q (Bio) and G S Q [maths] [1988 Auguest] புதிய வகுப்புக்கள் பங்குனி 1ம் திகதி ஆரம்பமாகவுள்ளன Pharmacy 1988, 1989 ஆரம்பமாகவுள்ளது மாசி 20ம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும் அதிபர், உயர்கலைக் கல்லூரி, 73. பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். சி-2021

G C E [O/L] [விஞ்ஞானம்] [1988 Dce], G C E [A/L] [கலை, விஞ்ஞானம், வர்த்தகம்] [1988 Aug 1989 Aug] Stenograpy [Shorthand and Typing] [Landon and Ceylon Exam], விஞ்ஞான முறைப்படியான தையல் வகுப்பு, மனையியல் வகுப்பு [Dipoma] பங்குனி 1ம் திகதி ஆரம்பமாகவுள்ளது. மாசி20ம் திகதிக்குமுன், சேரவிரும்புவோர் தொடர்புகொள்ளவும். அதிபர், உயர்கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். சி-2020

## கல்வி

G. C E (O. L)ல் கட்டாய பாடமாகிய கணிதபாடத்தில் ஆரம்ப அறிவில்லாதவர்களுக்கும். இதுவரை சித்தியெய்தாதவர்களுக்கும். ஆரம்ப அறிவிலிருந்து விஷேட சித்திக்கு குறைந்த காலத்தில், 19 வருட அநுபவமுள்ள ஆசிரியரினால் வீடுகளிற்சென்று கற்பிக்கப்படும் வீட்டிலும் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. ஆறுமுகநாதன். 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை சுண்டுக்குழி (சி 2087)

கொழும்பிலுள்ள பிரபல கல்லூரிகளில் கல்வி பயின்ற ஆசிரியரினால் ஆங்கிலம் பேச, எழுத வாசிக்க, (O L)ல் விசேட சித்திபெற சிறந்த முறையில் கற்பிக்கப்படும் கடிதத் தொடர்பு கொள்ளவும் No-10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை சுண்டுக்குழி. [சி 2086]

பாலராசிரியர் பயிற்சிநெறி சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறுகிறது க. பொ த. (சா/த) சித்தியடைந்த பெண்கள் விண்ணப்பிக்கலாம். நேரில் வந்து பயில முடியாதவர்கள் தபால் வழியும் பயிலலாம். பாலராசிரியர் சங்கம், 42, பிரப்பங்குளம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி 2051]

## MATRIMONIAL

Vellala Catholic Engireer (M Sc London) seeks pleasent bride of similar status. Under 28 yaears and height 5'6'' Doctor or Accountant preferred For further details contact Advt No C 2075 C/o Eelanadu, Jaffna. (C 2075)

## WANTED

B Sc (Maths, Chemistry, Statistics) with teaching and office experience seeks suitabe employment Apply Advt No C 19 5 C/o Eelanadu, Jaffna. (C 1995)

Wanted Lady House-Keeper for immediate employment to look after two school children Servant provided Contact 165, 4th Cross Street, Jaffna Between 9-00 a m. 10-00 a m. on week days (C 2083)

## தவறிவிட்டது

வி சிவசோதி என்பவருக்குச் சொந்தமான சாரதி லைசென்ஸ் இல. DL. 433118 யாழ்நகரிலிருந்து சித்தங்கேணி செல்லும் மினிவானில் 3-2-88 இல் தவறிவிட்டது இதைக்கண்டெடுத்தவர்கள் அராலி மேற்கு வட்டுக்கோட்டை என்னும் முகவரியில் தயவுசெய்து ஒப்படைக்கவும் சி 2092)

## மணப்பந்தல்

யாழ் இந்து உயர்குலத்தைச் சேர்ந்த நடுத்தர உயரம், பொது நிறமுடைய செவ்வாய் குற்றமற்ற 0 வயது டாக்டர் பெண்ணுக்கு நன்கு படித்து உத்தியோகமான மணமகன் தேவை. தகுந்த சீதனம் கொடுக்கப்படும். முழு விபரங்களுடனும் ஜாதக குறிப்புடனும் விண்ணபிக்கவும். விளம்பர இல. 2046, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். [சி 2046]

யாழ் இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த எக்கவுண்டனக அமெரிக்காவில் தொழில் புரியும் தற்சமயம் லீவில் நிற்கும் 29 வயது மணமகனுக்கு எக்கவுண்டன் மணப்பெண் தேவை தொடர்பு ABCDE விவாகப்பொருத்துனர் 328 நாவலர் றோட் ஆனைப்பந்தி. (சி 2080)

யாழ் இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த சங்கீத பட்டதாரி மணப்பெண்ணுக்கு மணமகன் தேவை எக்கவுண்டன் எஞ்சினியர் விரும்பத்தக்கது. சீதனம் கொடுக்கப்படும் அத்துடன் அவுஸ்திரேலியாவிற்கு போக ஒழுங்கு செய்யலாம். தொடர்பு ABCDE விவாகப் பொருத்துனர் 328, நாவலர் றோட். (சி 2079)

விஸ்வ குலத்தைச் சேர்ந்த யாழ்இந்துமத 36 வயதுடைய கணக்காளர் (ACMA) தற்போது சவுதி அரேபியாவில் வேலை செய்பவர் குடிப்பழக்கம், புகைத்தல்லற்ற 7ல் செவ்வாயுள்ள வாலிபருக்கு பண்புள்ள, படித்த அழகான மணமகள் தேவை. சாதகக்குறிப்புடனும் முழுவிபரங்களுடனும் தொடர்பு கொள்க: வளம்பர இல. சி 2097 மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம். சி-2097

இந்து வேளாள 39 வயதுடையவருக்கு சிவந்த அழகிய மணமகள் தேவை மணமகன் மாதாந்தம் ரூபா 5000/- வருமானம் பெறுபவர். குடும்பப் பொறுப்பற்றவர். பெற்றோர் இல்லை. வயது குறைந்த பாதிக்கப்பட்ட அல்லது வாழ்விழந்த மணமகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் வெகுவிரைவில் திருமணத்தை எதிர்பார்ப்பதால் முதற் கடிதத்திலேயே முழு விபரங்களுடன் - சாதகக் குறிபபு அனுப்புவது விருப்பத்தககது. விண்ணப்பிக்கவும். விளம்பர இல சி 2102 மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம் (சி 2102)

## கண்டெடுக்கப்பட்டது

K பாலச்சந்திரன் என்பவருக்குச் சொந்தமான 8 ஸ்ரீ2440 மொரிஸ் ஒக்ஸ்போட் கார் லைசென்ஸ் புத்தகம் K. சந்திரசேகரம், வேலணை கிழக்கு, வேலணை 4 என்பவரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது உரியவர் வந்து தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். (சி 2096)

# 'எய்ட்ஸ் நோயும் ஒரு பொருளாதார நெருக்கடி!

வாஷிங்டன் பெப் 6

**'எய்ட்ஸ்' நோய் வெறுமனே ஒரு பயங்கர நோயாக மட்டுமல்லாது உலகளாவிய ரீதியில் பாரிய பொருளாதார நெருக்கடிகளையும் உருவாக்கும் ஒரு காரணியாகவும் மாறவிருப்பதாக அமெரிக்க மருத்துவ சஞ்சிகை ஒன்று தெரிவித்துள்ளது.**

'எய்ட்ஸ்' நோய் ஐரோப்பாவிலும் குறிப்பாக அமெரிக்காவிலும் வேகமாகப் பரவி வருகின்றது இந்த நோய்க்கான மருத்துவச் செலவினங்கள் பெருமளவில் காணப்படுகின்றன இது தவிர இந்நோய் தடுப்புக்கான ஆராய்ச்சி, பிரசாரம் என்பவற்றுக்கான செலவினங்களும் கூடுதலாக இருக்கின்றன.

இச் செலவினங்கள் காரணமாக அமெரிக்காவின் பல முக்கியநகரங்களில் வரிவிதிப்புகள் மற்றும் சௌக்கிய சேவைக் கட்டணங்கள் என்பனவற்றை உயர்த்தவேண்டிய நிலையில் இருப்பதாகவும் மேலதிக வரி விதிப்புக்களை கொண்டுவர வேண்டியயிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகரப்பகுதிகளில் எய்ட்ஸ் தடுப்புக்கான செலவினங்களைக் கையாளுவதற்கு கூடுதல் நிதி தேவைப்படுவதையடுத்து இங்கு விலைவாசி உயர்வு தவிர்க்க முடியாததாகின்றது

இதன்காரணமாக நகரப் பகுதிகளில் இருந்து பலர் வெளியேறலாம் எனவும், இதனால் பல பொருளாதார நெருக்கடிகள், சமூக மாற்றங்கள் என்பன இடம்பெறவும் இடமுண்டு எனவும் அந்த அமெரிக்க மருத்துவ சஞ்சிகை தெரிவித்துள்ளது.

1990ம் ஆண்டில் 'எய்ட்ஸ்' ஏற்படுத்தும் பொருளாதார நெருக்கடி உலகளாவியரீதியில் விரிவடையும் எனவும் அந்த சஞ்சிகை ஊகம் தெரி

[5-ம பக்கம் பார்க்க]

## வரதட்சணைக் கொடுமை 3 சகோதரிகள் தற்கொலை!

(புதுடில்லி)

**இந்தியாவில் வரதட்சணைக் கொடுமையால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று இளம் சகோதரிகள் ஒன்றாக தற்கொலை செய்துகொண்டனர்.**

கான்பூர் என்னுமிடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது மூவரும் வீட்டில் தூக்குப்போட்ட நிலையில் காணப்பட்டதாக பெற்றோர் தெரிவித்தனர்.

பலமுறை பல மாப்பிள்ளைகள்வந்தும் சீதனம் ஒத்து வராத நிலையில் இவர்கள் திருமணம் தள்ளிப்போடப்பட்டு வந்தது. விரக்தியடைந்த சகோதரிகள் மூவரும் துக்ககரமான இம்முடிவை மேற்கொண்டனர்.

கடந்த வருடம் மாத்திரம் இந்தியாவில் பெண்களுக்கெதிரான வரதட்சணை கொடுமைகள்பற்றி 3000ற்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் திருமணத்தில் வரதட்சணை வாங்குவது தடை செய்யப்பட்டுள்ளது தெரிந்ததே. (இ)

## ஸ்டாலின் காலத்து கைதி கோபச்சேவினல் விடுதலை!

மாஸ்கோ, பெப் 6

இரண்டாம் உலகயுத்தகால ரஷ்யத்தலைவரான ஸ்டாலினல கைது செய்யப்பட்டு சிறைவைக்கப்பட்ட சுமார் 20 பேர் தற்போதைய சோவியத்தலைவர் மிக்கேல் கோபச்சேவினல் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

1938ம் ஆண்டில் ஸ்டாலினின் நில உரிமை குறித்த கொள்கை, மற்றும் கூட்டுப்பண்ணை அமைப்புககு எதிராக செயல்பட்டவர்களே ஆயுட்காலச் சிறைத்தண்டனைக்குள்ளாக்கப்பட்டனர்.

ஆனல் கடந்த ஆண்டில் சோவியத்யூனியனின் தற்போதைய தலைவர் மிக்கேல்கோபச்சேவ் வெளியிட்ட சீர்திருத்தக்கருத்துக்களின் அடிப்படையில், ஸ்டாலினல் சிறைவைக்கப்பட்டவர்கள் தற்போது விடுதலையாகியுள்ளனர்.

முதல் கட்டமாக 20 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டனா. இவர்களில் நிக்கோலாய் புக்காரின் என்பவர் முக்கியமானவராவார். இவர் ஸ்டாலினின் காலத்தில் ஒரு முக்கிய எதிர்ப்பாளராவார்.

புனர்வாழ்வளிக்கும் திட்டத்தின் கீழேயே இவர் விடுதலையாகியிருப்பதாகவும், மேலும் பலர் படிப்படியாக விடுதலையாவர் எனவும் தெரிவிக்கப்பட்டது (இ)

## கராச்சியில் இனக்கலவரம் 9 பேர் மரணம்!

கராச்சி, பெப் 6

பாகிஸ்தானின் கராச்சி நகரில் இடம்பெற்ற இனக்கலவரத்தில் 9 பேர் கொல்லப்பட்டனர். உடமைகள் பலவும் சேதமடைந்தன.

கராச்சியின் வடபகுதியிலேயே இச்சம்பவம் இடம் பெற்றது. கடந்த ஆண்டு கராச்சியில் நிகழ்ந்த இனக்கலவரம் ஒன்றில் பொலிஸ், இராணுவத் தலையீடுகாரணமாக நூறுக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர்.

இம்மரணமானவர்களுக்கான நஷ்டஈடு கிடைப்பது தொடர்பாகவே மீண்டும் நேற்று கராச்சியில் கலவரங்கள் வெடித்தன.

பட்டான், மஹஜி என்ற இரு சமூகத்தரிடையே இக் கலவரங்கள் நேற்று மூண்டிருந்தன என்று தெரிவிக்கப்பட்டது. (இ)

## ஒரு லட்சத்து முப்பதாயிரம் அகதிகள்

(சென்னை)

தென் இந்தியாவில் அகதி முகாம்களில் தற்போது ஒரு லட்சத்து முப்பதாயிரம் தமிழ் அகதிகள் தங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் 5 தொகுதியாக சுமார் ஐயாயிரம் பேர் தாயகம் திருப்பியனுப்பப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது. (சி)

## தீவிரவாதிகளை தேடும் முயற்சியில் விமானங்கள், ஹெலிகள்

(கொழும்பு)

தென்பகுதியில் அரசு எதிர்ப்பு தீவிரவாதக் குழுக்களை தேடும் நடவடிக்கைகளுக்கு விரைவில் ரோந்து விமானங்களும், ஹெலிகொப்டர்களும் ஈடுபடுத்தப்படவுள்ளன.

தெற்கே அடர்ந்த காடுகள் நிறைந்த பகுதிகளில் தீவிரவாதக்குழுக்கள் முகாமமைத்து பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதாகவும், இவர்களைத் தேடும் முயற்சியில் தரைமார்க்கமாக ஈடுபட்ட இராணுவ பொலிஸ் அதிரடிப்படைகூட்டு முயற்சிகள் வெற்றயளிக்காததையடுத்தே விமானம்மூலம் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊவா மகாணத்தில் எண்பத்தையாயிரம் ஏக்கர்விஸ்தீரணமான காடுகளே முதலில் இத்தேடுதல் நடவடிக்கைக்குள்ளாகுமென்றும் தெரியவருகிறது (சி)

## புனித அந்தோனியார் சனசமூகநிலைய புதிய நிர்வாகசபை

(யாழ்ப்பாணம்)

பாஷையூர் மகேந்திர வீதி தட்டத்தில் அமைந்திருக்கும் புனித அந்தோனியார் சனசமூகநிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நிலைய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

கடந்தகாலவருடாந்த அறிக்கைகள், வருடாந்த வரவு செலவு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டபின்னர் பொதுச சபை அறிக்கைகள் சரியென ஏகமனதுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டபின்னர் புதிய நிர்வாகசபை தெரிவுசெய்யப்பட்டது

தலைவர் செ. குயின், உபதலைவர் இ யூலியஸ் கோமஸ் செயலாளர் செ. அன்ரனி உப செயலாளராகத. கிருபா. பொருளாளர் கு. மரியதாஸ் நிலையப் பொறுப்பாளர் அ ருஜி. ஜெ. ருஜன், சே. அன்ரன், அ. சண்டோ, அ. தவம், பி. மென்ரிஸ், செ தவம், அ. செல்வம். ஆகியோர் நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

## தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கப்

(தெல்லிப்பழை)

அண்மைக்காலச் சம்பவங்களால் பாதிக்கப்பட்டுத் தற்காலிகமாக கொல்லங்கலட்டியில் இயங்கிய தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், இவ்வாரம் தொடக்கம் தெல்லிப்பழைச்சந்தியிலுள்ள பழைய கட்டிடத்தில் இயங்குகிறது.


### பிரயாண ஒழுங்குகள்

★ டுபாய்

யுக்கி தையல்மெஷினில் வேலைதெரிந்த 20—40க்கும் உட்பட்ட பெண்கள், ஆண்கள் உடனடியாகச் செல்வதற்கு ஒழுங்குகள் செய்துதரப்படும்.

(1) உணவு இருப்பிடவசதி இலவசம்.
(2) 2 வருடம் ஒப்பந்தம்.
(3) முற்பணம் அறவிடப்படமாட்டாது.

பாஸ்போட்-6 படம் நேரில் சமூகந்தரவும்.

சொரூபினி றேடேஸ், கண்டி வீதி, கைதடி

185/2 நியூலலிதா பில்டிங், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஏ-2513

### விக்னு டியுசன் சென்றர்

52, ஸ்ரான்லிறேட், யாழ்

(கலை, வர்த்தக வகுப்புக்களுக்கும் O/L வகுப்புக்களுக்கும் தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

A/L கலை, வர்த்தக

88 மீட்டல்

Day Classes (7-15 a. m.)

ஆரம்பமாகிவிட்டன

மு. குறிப்பு

1. Day Classes எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்களால் ஒருங்கிணைந்து போதிக்கப்படுகின்றன.
2. வாரத்தில் ஐந்து நாட்களும் சகல பாடங்களும் நடைபெறும்.
3. விடுதி வசதி செய்துகொடுக்கப்படும்.

ஏ-2510

### தபால்மூலம் கல்வி

ஆங்கிலம் தபால்மூலம் ஓய்வுநேரங்களில் வீட்டிலிருந்தபடியே பேச எழுத ஆறு மாதங்களில் கற்றுக்கொள்ளுங்கள்

C. I. M A., A. A. T. — Accounts, Costing, Law, Data Processing, Economics தபால்மூலம் ஓய்வுநேரங்களில் வீட்டில் இருந்தபடியே கற்றுக் கொள்ளுங்கள். சித்தி நிச்சயம்.

விபரங்கட்கு: Sai Educational Trust, 372 பருத்தித்துறை வீதி, நல்லூர் மார்க்கட், யாழ்ப்பாணம்

(சி-2072)

### பிரயாண ஒழுங்குகள்

கப்பலில் செல்வதற்கு

Chief Officer
Second Officer
Radio Officer
Third Officer
Third Engineer
மற்றும்
Oiler, AB ஆகியோருக்கு

பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும்.

தொடர்பு கொள்ளவும்:

இ. பாக்கியநாதன், 185/2, நியூ லலிதா பில்டிங், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஏ-2512

### யாழ் - கொழும்பு விமானசேவை



பலாலிக்கு விசேட போக்குவரத்து வசதிகளுடன் ஒழுங்காக நடைபெறுகிறது உங்கள் ஆசனங்களை முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளவும்

MACK Communications & Travels,

இல. 8, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறைவீதி யாழ்ப்பாணம்.

[எ 2515]

# வியாழபகவானின் ராசி வாரியான பொதுப்பலன்

[நேற்றைய தொடர்ச்சி

## சிங்கம்

இந்த ராசிக்காரர்களுக்கு வியாழபகவான் 9 மிடம் வருவதால் சகோதரசுகம், சரீர சுகம் சஞ்சல நிவர்த்தி ஆகியவையுண்டாம். மேலும் பிதா வழிச்சுகம் அவ்வழிப் பொருள் வரவு இனசனப் பகையும் இவ்விடச் சுகக்குறைவிற்கும் இடமுண்டாம். மேலும் வேண்டியவர்கள் விரோதிகளாகச் செயல்பட்டாலும் முடிவில் வெற்றி உங்களுக்குத்தான். பேலும் குடும்பத்தில் சுகக்குறைவிற்கும் இடமுண்டாம்.

வியாபாரிகளுக்கு

வியாபார விருத்தியும் பெரியோர் ஆசியுமுண்டாம்.

உத்தியோகத்தர்களுக்கு:-

மேலதிகாரிகளின் சுபார்சுக்கும் இடமுண்டு.

பெண்களுக்கு:-

இக்காலம் புண்ணிய கருமங்களிலும் ஈடுபாடு உண்டு.

மாணவர்களுக்கு-;

கல்வி விடயங்களில் முதியோர்களின் உபதேசங்களுக்கும் இடமுண்டாம்.

## கன்னி

இந்த ராசிகாரர்களுக்கு வியாழபகவான் 8 மிடம் வருவதால் (அட்டமத்தில்) இக்காலம் மனச்சஞ்சலங்களும் நெருங்கிய உறவுகளில் பிணக்கும், எதிர்பார்த்த விடயங்களில் தாமதமும் உண்டாம் குறிப்பாக இக் காலங்களில் குடும்பத்திலும் வீண் மனத்தாபங்களும் உண்டாம். மேலும் வழக்கு விவகாரங்களுக்கும் கெட்டபெயர் கேட்கவும் சிறு விபத்துக்களுக்கும் இடமுண்டாம். எனவே நிதானம் வேண்டும்.

வியாபாரிகளுக்கு-:

சென்ற ஆண்டைவிட இவ்வாண்டு மந்தமாகவே இருக்கும் மேலும் கொடுக்கல் வாங்கல் பிணக்குகளும் உண்டாம்.

உத்தியோகத்தர்களுக்கு:-

தொழில் துறையில் புதிய தொல்லைகள் தோன்றக் கூடும். இதன் மூலம் மேலதிகாரிகளின் தொந்தரவும் ஏற்படலாம்.

பெண்களுக்கு;-

இக்காலம் அதிர்ச்சி தரும் சம்பவங்கள் ஏற்பட இடமுண்டு. எதையும் தாங்கும் இதயம் வேண்டும். தெய்வ வழிபாடு நன்மைதரும்.

மாணவர்களுக்கு:-

கல்வி விடயங்களில் மந்த நிலையு முயற்சிகளில் முட்டுக்கட்டையும் உண்டாம்.

## துலாம்

இந்த ராசிக்காரர்களுக்கு வியாழபகவான் 7மிடம் வருவதால் இக் காலம் நன்மையான காலமாகும். மேலும் குடும்பத்தில் நல்ல மாற்றங்களுக்கும் இடமுண்டாம். இக்காலம் எக்காரியங்கள் மேற்கொண்டாலும் பயனுண்டாம்.

வியாபாரிகளுக்கு:-

இக்காலம் வியாபார விருத்திக்கும் இடமுண்டாம்.

உத்தியோகத்தர்களுக்கு

தடைப்பட்ட விடயங்கள் நடைபெறக்கூடிய பலனுக்கும் இடமுண்டாம்.

பெண்களுக்கு:-

இக் காலம் குடும்பத்திலும் மகிழ்ச்சி நிலமை சிலருக்கு பங்சள படன்களுக்கும் இடமுண்டு.

மாணவர்களுக்கு:-

ஊக்கமிகுதியும் உயர் கல்வி நாட்டமும் உண்டு.

## விருச்சிகம்

இந்த ராசிக்காரர்களுக்கு வியாழபகவான் 6மிடம் வருவதால் இ காலம் பிணக்குப்பட்ட விடயங்களில் இணக்கம் காணப்படும் வெளியித் தொடர்புகளுக்கும் இடமுண்டு சிலருக்கு திடீர் பயணங்களுக்கும் இடமேற்படும். அன்னிய பிரபுக்களாலும் உதவியுண்டு. வழக்கு விவகாரங்களும் தேடிவரும் உறவினர்கள் மூலம் உபாதைகளுக்கும் இடமுண்டு.

வியாபாரிகளுக்கு:-

இக்காலம் பொறுமை அவசியம் வேண்டும். பொறுப்பேற்கும் விடயங்களில் முன்னெச்சரிக்கை வேண்டும்.

உத்தியோகத்தர்களுக்கு:-

இக்காலம் பொறுமைக்கு மத்தியில் பணியாற்ற வேண்டிவரும். பேச்சில் நிதானம் நன்று

பெண்களுக்கு:-

இக்காலம் தேகசுகக் குறைவிற்கும் இடம் உண்டாம். சிலருக்கு பிடப்பிரிவுமுண்டு.

மாணவர்களுக்கு:-

கல்வி விடயங்களில் திடீர் திருப்பமும் பிரயாண சுகமும் உண்டாம்.

## தனுசு

இந்த ராசிகாரர்களுக்கு வியாழபகவான் 5மிடம் வருவதால் செய்தொழில் சிறப்பும் புத்திர வழிச்சிறப்பும் தெய்வகுரு பக்தியுமுண்டாம். மேலும் குடும்பத்திலும் சில பிணக்குகள் தோன்றி மறையும் புதிய எண்ணங்களும் மனதில் தலைதூக்கும் இனசனக் கொண்டாட்டமும் உண்டு.

வியாபாரிகளுக்கு;

புதுத்தொழில் விருப்புக்கும் இடம் உண்டு. பிரமுகர்களும் தேடிவருவர்.

உத்தியோகஸ்தர்களுக்கு:

பதவி மாற்றங்களும் ஏற்படலாம். மேலதிகாரிகளுடன் தகராறுகளும் வரும். பேச்சில் நிதானம் வேண்டும்,

பெண்களுக்கு

உடல் உபாதைகளினால் சிரமப்படநேரும். இதயத்தில் எண்ண அலைகள் மோதும். திடீர் செலவும் உண்டு.

மாணவர்களுக்கு

உயர்கல்வி நாட்டமும் உபாத்தியார் சன்மானமும் வித்தையில் விருப்புமுண்டாம்

## மகரம்

இந்த ராசிகாரர்களுக்கு வியாழபகவான் 4மிடம் வருவதால் இக்காலம் தேகசுகம் பொன் பொருள் பூமி வீடு வாசல் சிறப்புள உண்டு. சிலருக்கு வெளியூர் மாற்றங்களுக்கும் இடமுண்டாம். மேலும் தடைப்பட்ட பொருளாதார நிலை சீராகும். குடும்பத்திலும் நன்மைக்கும் இடமுண்டாம். வியாபாரிகளுடன் பகைத்துக் கொள்ள நேரிடும். வியாபாரத்திலும் சமநிலை உண்டு.

உத்தியோகஸ்தர்களுக்கு

இக்காலம் தொழில் துறையில் நன்மை இருப்பினும் பிறர் தலையீடுகளால் தவிக்க நேரிடும்

பெண்களுக்கு:

இக்காலம் தாய்வழி சுகத்திற்கும் அவ்வழிப் பொருள் வரவிற்கும் இடமுண்டாம்.

மாணவர்களுக்கு.

கல்வியில் முன்னேற்றம் காணப்படும், தொழில் நுட்பம் சம்பந்தப்பட்ட வித்தை ஆர்வமும் உண்டாம்.

## கும்பம்

இந்த ராசிக்காரர்களுக்கு வியாழபகவான் 3மிடம் வருவதால் எதிர்பாராத வரவுக்கும் உறவினர் சகாயத்திற்கும் இடமுண்டு. கடன்தொல்லையும் குழந்தைகளின் பீடையும் நீங்கிமகிழ்ச்சியும் பொங்க இடமுண்டாம். குடும்பத்திலும் சுகமுல் குறிக்கோளில் வெற்றியும்உண்டாம். மேலும் பிரயாண சுகமும் உண்டு.

வியாபாரிகளுக்கு

வியாபார விருத்தியுண்டு. பொதுவிடயங்களிலும் ஈடுபாடு ஏற்படும் இதன்மூலம் செல்வாக்கும் உயரும்.

உத்தியோகஸ்தர்களுக்கு

கடமைபுரியுமிடத்தில் சக உத்தியோகஸ்தரால் தொந்தரவுக்கும்இடம்முண்டு. கவனம் வேண்டும்.

பெண்களுக்கு

இக்காலம் நூதன ஆபரணங்கள் சேர்க்கும் உடமுண்டாம்.

மாணவர்களுக்கு

விடாமுயற்சி இருப்பின் முன்னேற்றம் உண்டு. அன்னியர் ஒருவரின் உதவியுமுண்டு

## மீனம்

இந்த ராசிகாரர்களுக்கு வியாழபகவான் 2மிடம் வருவதால் இக்காலம் நண்பர்களாலும் நன்மையும், குடும்பத்தில் மகிழ்ச்சியும் பொதுத்துறையில் ஈடுபாடும் உண்டாம். மேலும் இக்காலம் தனவரவும் தன்தொழில விருத்தியும் ஆத்மீகப்பற்றும் உண்டாம்.

வியாபாரிகளுக்கு;

வியாபாரத்துறையில் எதிர்பாரா மாற்றங்களுக்கும் இடமுண்டாம்.

உத்தியோகஸ்தர்களுக்கு

தடைப்பட்ட வரவுக்கும் இடமுண்டு புதிய நண்பர்களையும் தேடிக்கொள்வீர்கள்.

பெண்களுக்கு:

குடும்ப சுகமும் இனசனக் கொண்டாட்டமும் உண்டு.

மாணவர்களுக்கு

எண்ணிய விடயங்களில் எதிர்பாராத வரவும் கல்வி விடயங்களில் சம சுகமும் உண்டாம்.

திருமலை

வே. ரவீந்திரன்

---

# இன்றைய பலன்

மாசம்: தை

திகதி; 24 (1988-02-7)

திதி: சதுர்த்தி மு. ப வரை

நக்ஷத்திரம் அத்தம்

கிழமை: ஞாயிறு

மேடம்: எண்ணிய காரியத்தில் தடை ஏற்படும். மேலதிகாரிகளின் கண்டிப்பு உண்டு குடும்பப் பிணைப்புகள் இறுகும் சிறிய விபத்துக்களும் இடம்பெறலாம்.

இடபம்:- பெரியோர் டகழ்ச்சியும், புதுப் பிரயாணங்களும பூமிப் பொருள் லாபங்களும் உண்டு.

மிதுனம்!- சனவரவு உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. சில விடயங்களுக்குத் தடைவிதிக்க தரகர்கள் காத்திருப்பர்.

கடகம்:- திடீரென வரும் வருவாயால் கடன்தொல்லை தீரும். அடைக் கரங்கள் அணைக்கும் நல்ல விடயங்களுக்கு வழிகோலப்படும். பிதா வழிச் சுகமும் உண்டு.

சிங்கம்: சிறுவிபத்து ஏற்படலாம். ஆத்திரம் சிந்தனையைக் குழப்பும் நிதானத்துடன் செயல்படவும் உடல் நலம் பாதிக்கப்படலாம் பெண்கள் மிகவும் அவதானம்வேண்டும்.

கன்னி: பந்த பாசம் உன்களைப்பரவசப்படுத்தும். இளையோர் சுசப்பர் குழந்தையொன்றின் உடல் நலம் குன்றும். பதட்டமும் சேரும். இறைவழிபாடு நன்று

துலாம்: குடும்பத்தில் சிறு பூசல்களின்பின் குதூகலம் தென்படும். நண்பர்களின் மூலம் நச்சரிப்பும் உண்டு எதிர்பார்த்த விடயத்திலும் சிறுதிரும்பம் காணப்படும். பேச்சில் நிதானம் வேண்டும்

விருச்சிகம்:- எண்ணிய கருமத்தில் தடையேற்படும் மேலதிகாரிகளின் கண்டிப்பும் உண்டு சகோதரவழிச் சஞ்சலமும் உண்டு. வஞ்சகர் மனதால சஞ்சல உண்டு.

தனுசு:- மாதுரு வழிச் சுகமுண்டு மாணவர்கள் வாழ்வில் முன்னேற்றம் உண்டு. வாசனச் சொந்தக்காரர்களுக்கு நன்மை சாரதிகள் அவதானம் வேண்டும்

மகரம்:- வெளியிடத் தொடர்புகள் சிறப்பைத்தரலாம் படித்தவர்களால் பயன் கிடுடும் சகோதரர்கள ல் தொல்லை அதிகரிக்கும். பிரயாணங்களைத் தவிர்ப்பது நன்று பேச்சாளர்களும் வீரம் காட்டுவர்.

கும்பம்;- குடும்பத்தில் சுககுறைவும் ஆயுதபீடைக்கும் எதிரியின் சச்சரவிற்கும் இடமுண்டு. பிரிவும் உங்களை நிலைதடுமாறவைக்கும். அன்னியுயர் உதவிமுண்டு

மீனம் குடும்பத்திலும் மகிழ்ச்சிக்கு இடமுண்டு. கைத்தொழில் புரிவோருக்கு முன்னேற்றம் உண்டு. புதிய சந்திப்புகளும் உண்டாகலாம். எதுவிடயத்திலும் உண்மையுடனும் நேர்மையுடனும் நடந்துகொள்ளவும்.

திருமலை

வே. ரவீந்திரன்

---

## சன்மார்க்கசபை நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் புதிய நிர்வாகசபை தேர்தல் அண்மையில் நடைபெற்றபோது தலைவராக கலாகேசரி ஆ. தம்பித்துரையும், உப தலைவர்களாக தி குகானந்தன் ம. சிவபாலன் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்ள்னர். இணைச்செயலாளர்கட கை. இரவீந்திரன், க. விஸ்வநாதன் ஆகியோரும் பொருளாளராக த. செல்லத்துரை இ ஸ்ரீசாந்தமாக ஆகியோரும் நூல்நிலையப் பொறுப்பாளர்களாக இ. ராபநாதன் ச பழனி வல் ஆகியோரும் தெரிவாகினர்.

நிர்வாகசபை உறுப்பினர்களாக ம.சா ரத்தினம், பொ. இராசரத்தினம் செ. ஈஸ்வரபாலன் பொ. இராசகுலசேகரம் சு. சிவராசன், சி. தயாபரன், செ. ஜெயமூர்த்தி பொ. பாலகுமார் தெரிவுசெய்யப்பட்டனர்.

---



# 'ஒருபுன்னகை ராஜாங்கம் போய்விட்டது'

— கவிஞர் வைரமுத்து

(எம். ஜி. ஆர். மறைவு குறித்து திரைஉலக பருகர்களின் கண்ணீர் அஞ்சலியை சென்னை தொலைக்காட்சி (டெலிவிஷன்) ஒளி ரப்பியது. இதில் கவிஞர் வைரமுத்து இரங்கல் தெரிவித்து பாடிய கவிதை இது

ரோஜாக்களே!
இனி
யாருக்காகப் பூப்பீர்கள்?
அலைகளே
இனி
யாருக்காகக் கை
தட்டுவீர்கள்?
சாலைகளே
இனி
யார்வருகைக்காகக்
காத்திருப்பீர்கள்?
ஒரு
புன்னகைராஜாங்கம்
போய்விட்டது!
கவிஞர்களின் காதலன்
காலமாகிவிட்டான்!
வற்றிப்போகாத
வரலாறே?
உன்னை
நேசிக்கும் நெஞ்சங்கள்
நடிப்பில்கூட
உன்னை
இறக்க விட்டதில்லையே!
நிஜத்தில் இறநதாயே
நியாயமா!
தென்னகத்தையே
சென்னைக்கு
வரவழைத்துவிட்டு
ரெங்கோ
போய்விட்டாய்
நீயா?
உன் தொண்டர்கள்
மாலைகள் தான்
வாங்கினார்கள்
மாலையில் வாங்கிய
மாலைகள்
காலையில் பார்த்தால்
மலர் வளையங்கள்!
ஒருநாள்
எனக்கு நீ
விருதளித்தாய்
தங்கம்தான்
விருதென்று
எல்லோரும்
நினைத்தார்கள்

நான் மட்டும்
நினைத்தேன்
உன்
விரல் தொட்டதே
விருதென்று.
உன்
வயது
ஒரு நூற்றாண்டுகள்
உன்
வாழ்க்கையோ
சில நூற்றாண்டுகள்
காலடிச் சுவடுகள்
அழிந்துவிடும்!
காலச் சுவடுகள்
அழிவதில்லை
கிராமத்துக் காற்றில்
கலந்திருக்கும் உன்
கீதங்கள்
வெள்ளித்திரையில்
நீ ஓட்டிய
குதிரைகளின்
குளம்படிச்சத்தம்!
சாதுமடல்களில
ஒட்டிக்கொண்டிருக்கும்
உன் உச்சரிப்பு!
இதயச் சுவர்களில்
எழுதப்பட்டிருக்கும்
உன்
ராஜசித்திரம்!
பாமர மக்களை
நிஜமாய் நேசித்த
நேசம்!
இவையெல்லாம்
உன்
காலடிச் சுவடுகள்
அழிந்துவிடும்!
காலச்சுவடுகள்
அழிவதில்லை
யாருடைய சாவுக்கும்
மரணம் மட்டும்
வருத்தப்படுவதில்லை
ஒருநாள்
மரணத்திற்கு
மனச்சாட்சி வந்தால்—
உன்னிடம் மட்டும் வந்து
மன்னிப்புக் கேட்கும்.

## எய்ட்ஸ் நோயும்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளது.

அமெரிக்க ஐரோப்பிய நாடுகள் தமது வரவுசெலவுத்திட்டங்களில் பாதுகாப்புச்செலவினங்களைவிட எய்ட்ஸ் தடுப்புக்கு கூடுதல் நிதியை ஒதுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. [கி]

## 3ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
சி. அமிர்தலிங்கம்
(முன்னாள் சட்டத்தரணியும், பதில் நீதவானும் மரண விசாரணை அதிகாரியும்)

தோற்றம்: 8-10-1928
மறைவு; 7-2-1985

“பூவுலகில் புகழுடல் நிறுத்திதேவுலகெய்திய சீரியோர் வரிசையில், தனியிடம் பெற்ற அன்புத் தெய்வமே! எம்மைப் பிரிந்து இன்றுடன் மூன்று ஆண்டுகள் ஓடிவிட்டன எமக்கு அமிர்தமான அன்புத் தந்தையே! ஒருநாள் கூட எமை பிரிந்து நீர் வாழ்ந்ததில்லை உம் பணி இனித்தான் நிறைய உண்டென இறைவன் உமை எம்மிடம் இருந்து அழைத்தானோ இன்று நீர் முடித்த பணியினால் ஆறுத் துயரம் ஆறிற்று சத்தியம் என்றும் ஜெயம்பெற்றிடும் தர்மமே பூமியில் என்றும் நிலைக்கும் என்றும் உமது ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும்.

அன்பு
மனைவி, பிள்ளைகள்,
மருமகன்,
“லிங்கஸ் கான்”
கோப்பாய். (சி 1978)

# ஆசிரிய மாணவிகள் விடுதியின்றி அவதி

(கோப்பாய்)

அண்மைக்கால அசம்பாவித சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட கோப்பாய் அரசினர் பயிற்சிக் கலாசாலை மாணவிகளின் விடுதி பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதால் மாணவிகள் பெரிதும் கஷ்டத்தை எதிர்நோக்குகின்றனர் என்று புகார் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி விடுதியிலுள்ள தளபாடங்களும், உபகரணங்களும் அண்மையில் சூறையாடப்பட்டுள்ளன, இதனால் இவ்விடுதியில் மாணவிகள் தங்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

இவ்விடுதிகளிலேயே தற்போது கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையின் அருகே அமைந்திருக்கும் பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலையின் மாணவிகளும் தங்கி இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜி. ஸி. ஈ. பரீட்சை: மாணவர்களுக்கு அடையாளஅட்டை முக்கியம்

(கொழும்பு)

இவ்வருடம் டிசம்பரில் ஜி. ஸி. ஈ. (சாதாரண தர) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு, பரீட்சைக்கு முன்பாகத் தேசிய அடையாள அட்டை பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சகல அரசாங்க பாடசாலை அதிபர்களுக்கும் ஆள் பதிவுத் திணைக்களம் சுற்று நிருபம் அனுப்பியுளளது.

இச்சுற்று நிருபத்தில் 16 வயதினைப் பூர்த்தியடைந்துள்ள மாணவர்கள் அனைவரும் தேசிய அடையாள அட்டை பெறுவதற்குத் தகுதியுடையவர்களெனவும், அவர்களது விண்ணப்பம் பாடசாலை அதிபர்களுக்கூடாக ஆள்பதிவு திணைக்களத்திற்கு அனுப்பப்படவேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

1988 டிசம்பரில் 16 வயதைப் பூர்த்தியடையாத மாணவர்கள் அஞ்சல் அடையாள அட்டை பெறவேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழகத்தின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் விரைவில் தாயகம் திரும்பவேண்டிய நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்வேன் என்றும் தெரிவித்தார். (சி)

## ‘தமிழ்தந்த தாதாக்கள்’ இன்று வெளியீட்டுவிழா

[யாழ்ப்பாணம்]

பல்கலைப்புலவர் க. சி. குலரத்தினத்தின் ‘தமிழ் தந்த தாதாக்கள்’ நூல் வெளியீட்டு விழா இன்று காலை யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலய மண்டபத்தில் திரு. சி. சரவணபவன் [சிற்பி] தலைமையில் நடைபெறும்.

யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானத்தின் ஆசியுரையுடன் ஆரம்பமாகும் இவ்விழாவில் பண்டிதர் க. உமாமகேஸ்வரன் வெளியீட்டுரையும், வித்துவான் க. குமாரசாமி ஆய்வுரையும் நடத்துவர்.

பண்டிதர் கி பொன்னம்பலவாணர், தெல்லியூர் செ. நடராசன், மயிலன்கூடலூர் ப. நடராசன் ஆகியோரின் சிறப்புரையை அடுத்து நூலாசிரியர் குலரத்தினத்தின் பதிலுரை இடம்பெறும்.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



செல்வன் சுதாகரன் இராசையா
(சுதா, ரமேஸ்)
[சிறுவிளான்]

அன்னை மடியில்;
17-05-1968

ஆண்டவன் அடியில்:
08-01-1988

அன்பின் உறைவிடமாய் பண்பின் நிறைகுடமாய் திகழ்ந்த எமது அருமைச் செல்வமே சுதா! என்றும் நிறைந்திருக்கும் குலவிளக்கே, உன் புன்னகையால் எம்மையெல்லாம் கவர்ந்தாய் உடன் பிறப்பின் உறைவிடமாய் இருந்தாய். கணப்பொழுதில் எம்மைவிட்டுப் பிரிந்தாய். எம்மைப் பிரிந்தாலும் என்றென்றும் எங்கள் உள்ளத்தில் நிலைத்திருக்கும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

உன் பிரிவால் துயறுரும்:
அப்பா, அம்மா
உடன் பிறப்புக்கள்,
மாமன்மார், மாமிமார்,
சிறியதந்தை, சிற்றன்னை,
மைத்துனர்மார்,
மருமக்கள், பாட்டி,
நண்பர்கள், உற்றார்,
உறவினர்கள்.

சிறுவிளான்,
இளவாலை. சி-2093

# “இலங்கை அரசின் ஒப்பந்த மீறல்!” பாலகுமார் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

“மொறக்கொட்டாஞ்சேனையில் கைதுசெய்யப்பட்டஎமது அமைப்பைச் சேர்ந்த ஹரனை இன்னமும் கொழும்பில்தடுத்து வைத்திருப்பது ஸ்ரீலங்காஅரசு இலங்கை இந்தியஒப்பந்தத்தை மீறிய செயலாகும்” என்று ஈழப்புரட்சி அமைப்பின் (ஈரோஸ்) பொது ஆணைக்குழு சார்பாக திரு. வே பாலகுமார் குற்றம்சாட்டியுள்ளார் இது சம்மந்தமாக திரு வே. பாலகுமார் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

“ஒப்பந்தத்தில், போராளிகளுக்கு பொதுமன்னிப்பு என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் வட கிழக்குக்கு வெளியே நடந்தசம்பவங்களில் ஈடுபட்டவர்களுக்கு பொது மன்னிப்பு இல்லை என்றோ, ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் முன்னர் நடந்த சம்பவங்கள் தொடர்பாக எவரையும்கைது செய்யமுடியும் என்றோ குறிப்பிடப்படவில்லை. ஒப்பந்தத்தில் குறிப்பிடாத பொழுதும் ஸ்ரீலங்கா அரசு கொழும்பு மலையகம் போன்ற இடங்களில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக எமது தோழர்களை இன்னமும் விடுவிக்காமல் இருப்பதோடு மேலும் ஆயிரக்கணக்கான தமிழ்பேசும் அரசியல் கைதிகளும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

“இராணுவம்தான் படைமுகாம்களுக்குள் முடங்கியிருக்கும் என்றும் விசேடஅதிரடிப்படை தொடர்ந்தும் தமிழ்பேசும்மக்களுக்கும், போராளிகளுக்கும் எதிராகசெயற்படும் என்றும் ஸ்ரீலங்கா அரசு ஒப்பந்தத்தை திரிபுபடுத்தி கூறுகிறது. இத்தகைய நிலையில தமிழ் பேசும்மக்களின் பாதுகாப்பு என்பது எவ்வாறு இந்திய அரசால் பேணப்படப்போகிறது என்பது கேள்விக்குறியாகவேஉள்ளது.

“எமது இயக்கத்தை பொறுத்தவரையில் இது நான்காவது ஒப்பந்த மீறலாகும்.

“ஹரன் விடுவிக்கப்படும் வரையும் சிறையில் உள்ள அனைத்து அரசியல் கைதிகளும் எவ்விதமான பாகுபாடும் காட்டப்படாமல் விடுவிக்கப்படும்வரையும் எமது அரசியல் போராட்டம் தொடரும் என்றும் இப்போராட்டங்களுக்கு அனைத்துத் தமிழ்பேசும் மக்களும் மனப்பூர்வமான ஆதரவை தரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றோம். சகல தொழிற்சங்கங்களையும் சகலஅரசியல் கட்சிகளையும் சகல சமூகநல ஸ்தாபனங்களையும் சகல பிரஜைகள் குழுக்களையும் இவ் ஒப்பந்தமீறலை கண்டிப்பதோடு தக்கநடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகின்றோம்.”

## 91-வது நாள் நினைவஞ்சலி



செல்வன் சிவலிங்கம் சிவறஜீன்
[சுதுமலை சின்மய பாரதி வித்தியாசாலை மாணவன்]

தோற்றம்; 28-06-1978
மறைவு: 09-11-1987

பாரினில் வாழ்வீரென பகல் கனாக் கண்டோம் மைந்தா! பாலகனாய் நீர் எம்மைப் பரிதவிக்கவிட்டு போனிரோ! எம் செல்வமே உமது ஒளிபடைத்த கண்ணும் உறுதிகொண்ட நெஞ்சும். அன்புள்ளமும் ஆர்வமும், சுறுசுறுப்பும். மலர்ந்த முகத்துடன் எம்மை அரவணைக்க பாசவிளக்கே! அருகிருந்தோரும் அண்மிக்கமுடியாத அமைதியற்ற செயற்கை சூழ்நிலையில் எம்மை ஆறுத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில்கொண்ட தங்களது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

உமது பிரிவால் துடிக்கும்:
அப்பா, அம்மா,
அக்கா, தம்பிமார்,
உற்றார், உறவினர்கள்.

க. சிவலிங்கம்,
சுதுமலை மேற்கு,
மானிப்பாய்.
[சி-2104]

## கட்டுவன் பிரஜைகள் குழு

[பலாலி]

கட்டுவன் கிராமசேவை அலுவலர் பிரிவுக்கான பிரஜைகள குழு உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர். எஸ். சிவராஜா, இணைத் தலைவர்கள்: ச சிறி பாலசுப்பிரமணியம், எஸ் நவரத்தினம், இணைச்செயலாளர்கள்; இ இராஜநாயகம், த. இராஜலிங்கம், பொருளாளர்: பி. அமிர்தலிங்கம், நிர்வாக சபை உறுப்பினர்கள்: எஸ். சிவசுப்பிரமணியம், மூ. தருமமூர்த்தி, எஸ் கிருபாசரன், வ. செல்லத்துரை, த. சண்முகநாதன், இ. பொன்னுத்துரை, வே. தங்கராசா, செ. சந்தசாமி, ஏ. வி. மாணிக்கம்.


## “கார்த்திகை பூ”

கார்த்திகைப் பூ என அழைக்கப்படும் நியங்கலா கொடி பூத்துக் காய் பிடிக்கும் பருவம் ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்கள் ஆகும்.

பொதுவாக இக்கொடி முட்புதர் மத்தியிலும், செம்மணல் தேறிகளிலும் அடர்ந்த காடுகளிலும் குறிப்பிட்ட மாதங்களில் தீ போல் பரவிய நிலையில் மண்டிக் கிடக்கும் கடற்கரை புதர்களிலும் இரயில பாதை ஓரங்களிலும் காணலாம்.

கார்த்திகைப் பூவின் இதழ்கள் பச்சை, மஞ்சள், சிகப்பு என பல வர்ணங்களில் மாற்றி காட்டி, இறுதியில் செந்நிறமாக காட்சிதரும். இப்பூ யாவரையும் தன்பால் இழுக்க வல்லது. பூவின் மத்தியில் காணப்படும் காய்கள் முற்றிய நிலையில் 1 அங்குல சனத்துடன் 2½ முதல் 4 அங்குல நீளமுடையதாக இருக்கும் இத்தகைய முற்றிய காய்களை பறித்து பச்சையாகவே கொள்வளவு செய்கின்றோம். நன்கு முற்றிய காய்களை கிலோ ரூ. 20/- வீதம் வாங்குகின்றோம்.

★ கார்த்திகை காய்கள்!
மீண்டும் சேகரிக்கின்றோம்

விபரம் எழுதவும்:

கதிரேசன் & Co.,
28, PRINCE STREET, CLOMBO-11.
(குமார வீதி, கொழும்பு-11)

யாழ்ப்பாணத்தில் 168, ஆஸ்பத்திரி வீதியிலுள்ள லிங்கம் ஸ்டோருடன் தொடர்பு கொள்ளவும், [சி-2091]



ST. JOHN'S COLLEGE, JAFFNA, O. B. A.
LUNCH
Welcome to Dr. E. S. Thevasagayam
&
Farewell to Mr T Gunaseelan,
Mr S. Panchalingam & Mr K Pooranampillai;
Venue: Robert Williams Hall.
Date: 27th February, 1988.
Time: 11 30 a m.
Rates; Single: Rs. 75/- Couple: Rs. 125/-
Please indicate vegetarian or Non vegetarian
Old Boys & Parents who wish to join please contact the Vice-Principal St John's College, Jaffna on or before 20th Feburary, 1988.
S THANAPALAN,
(A 2026) Hony. Secretary, O B. A.

### மணிவாக்கு

அரசாட்சியில் நீதிபரிபாலனத்துக்குத் தருமம், பலாத்காரம் இரண்டும் வேண்டும். — நெப்போலியன்

## நமதுநோக்கு

### புரிந்துணர்வுக்குரிய அமைப்பு அவசியம்

வெங்கலக் கடைக்குள் யானை மீண்டும் புகுந்துவிட்டதா? போர் தொடர்வதும் சமாதானம் பேசுவதும் என்ற கடந்தகால நிலை நீங்கி சமாதானத்தைப் பேசுவதாலேயேசமாதானம் கிட்டுமென்ற நம்பிக்கை நிறுவப்பட்ட நிலைக்கு நாம் வந்திருக்கின்றோம்.

இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்துபவர்பற்றி நாம் விசேட கவனம் செலுத்தவேண்டியிருப்பதால் இந்தக்கேள்வி அவசியம் நா அனைவரும் சூடு கண்ட பூனைகள். சூடுபட்ட பிறவிகள். எங்கள் அபிலாஷைகள் அலக்கழிக்கப்படாது பார்க்கும் பொறுப்பும் எமக்குண்டு.

போருக்குப் பொறுப்பெடுத்து அதனை நடத்தி முடிக்கும் ஆர்வமும் ஆற்றலும் கொண்ட தலைவர், வெற்றிகண்டபோதும் சமாதானத்துக்குரிய பொறுப்பை அவனுக்கு அளிக்கக் கூடாதென்பதால் மாவீரன் சேர்ச்சில், இரண்டாவது உலகயுத்தம் முடிவடையமுன்னரே பொதுத்தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்டார்.

அத்தகைய வீரன் இங்கில்லையென்பதை போரின் சீரழிவால் அறியலாம். ஆனால்போர் கோரமாக யாழ்ப்பாணத்தை தாக்கி, நகரை அண்மித்த காலத்தில் 'நமதே வெற்றி'என்று நம்பியவர் இன்று சமாதானம் பேசுவது விசித்திரம்.

அந்தநிலை மாறி இன்று நாம் தோலிருக்கச் சுளை விழுங்கிய நிலையில் அமைதிநாடி, அல்லும் பகலும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம். சயிற்றில் நடக்கும் ஆற்றல் எமக்கு அளிக்கப்பட்ட பயிற்சியானாலும், பொதுமக்கள் ஏமாறாத வழியில் அவர்களுக்கு வேண்டிய ஆலோசனை வழங்குவது எமது கடமை. அதனை நாம் என்றும் அலட்சியம் செய்வதில்லை

தெய்வத்துக்கு அடுத்தபடியில் நாம் இன்றுஎட்டிப்பிடிக்க முயல்வது இந்திய அரசு ஏற்படுத்தியஇலங்கை-இந்திய ஒப்பந்தம். அழிவில் சுழியோடி அனைத்தையும் இழந்த அனாதைகளாகிய எங்கள் மக்களுக்கு கைவசம் உள்ளது இந்த ஒப்பந்தம். அதற்கு உண்டான நெருக்கடிகள். பல. எம்மிற்பலர் நினைத்தபடி அது வேகமாகத் தொழில்பட்டு அமைதியை ஏற்படுத்திவிடவில்லை. ஆனால் அமைதியை நாடிச்செல்வதற்கு சாதனம் இன்று இதுஒன்றே. அதனைச் சாதகமாக்க நாம் ஆவன செய்தல் வேண்டும்.

எங்கள் பொறுப்பை ஏற்ற இந்தியப் பிரதமர் ராஜீவ் காலத்துக்குக்காலம் எங்கள் கருத்துக்களைபுரிந்துகொள்ளவும், நாம் அவருடைய கருத்தைக்கிரகிக்கவும் இன்று இதற்கென்ற வழிவகை இல்லை. இந்தியாவில் அஞ்ஞாத வாசம் செய்யும் முன்னாள் தமிழ் எம். பிக்களின் கருத்துக்களையும், தமிழ்ப்போராளிகளின் தலைவர்களையும் சந்தித்துப் பேசும் வாய்ப்பு இந்தியப் பிரதமருக்கு உண்டு இங்கு வாழும் தமிழ்மக்களைக் கலந்து ஆலோசிக்கும் நிறுவனம் அவசியம்.

இலங்கை அரசுக்கு இதற்குண்டான வசதிகள் பல. இருப்பினும் இலங்கை ஜனாதிபதி அண்மையில் குறிப்பிட்டதுபோல சில முக்கிய விவகாரங்கள் பிரதமரின் கவனத்துக்குப் போய் சேர்வதில்லை.

ஒப்பந்தத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு வேண்டிய அரசியல் வியாபாரம் செய்வதை எவரும் தடுக்கமுடியாது. தென்னிலங்கை மக்களின் அனுசரணை அவசியமென்பதால், அதற்கு மாறாக இங்கு வாழும் தமிழ்மக்கள் எதனையும் வற்புறுத்தும் பேதமையுடையவர்கள் அல்ல.

சிங்கள மக்களுக்கு எதிராக நாம் போராடவில்லையென்ற தெளிவான நோக்கத்தை தமிழ்ப் போராளிகள் அடிக்கடி நினைவூட்டினர். இதனைஒரு உள்நாட்டு யுத்தமாக்கிவேற்றுநாட்டுப் படைகளை வரவழைக்க எடுத்த பிரயத்தனங்கள் மண் கவ்வின.

இந்த அடிப்படையில் தமிழ்மக்களுக்குரிய பிரத்தியேக செய்திகள், அபிப்பிராயங்களை இந்தியா சார்பில் வேறெவரும் வெளியிடுவது பொருத்தமாகாது.

இந்தப்போரை நிறுத்தி தமிழ் மக்களுக்குரிய உரிமைகளை எவ்விதத்திலும் பெற்றுத் தருவேன் என்று வாக்குறுதி அளித்த இந்தியப் பிரதமர் சிக்கலானநிலையில் இங்கு வாழும் மக்களுடன் தொடர்புகொள்வதுஇன்றியமையாதது.

ஒப்பந்த அமுலாக்கத்தில் ஏற்படும் மாற்றங்கள், தடைகள் மக்களின் ஒன்றுபட்ட கருத்துக்கள்- இவற்றை நேரடியாக அறிவதற்கு ஒரு நிறுவனம் அவசியம். இத்தகைய நிறுவனம் புதுடில்லியிலோ அல்லது திம்புவிலோ அல்லது கொழும்பிலோ அமையாது யாழ்ப்பாணத்தில், திருகோணமலையில், மட்டக்களப்பில் இடம் பெறுவதே பொருத்தம்.

இந்திய ராணுவம் மக்களின் மனப்போக்கை அறிவதில் ஆவல்கொண்டிருக்கிறது. இருப்பினும் கதி இழந்த மக்களின் வாழ்வுக்கு வளம் அளிக்கும் அதிகார பலம்கொண்ட தலைவருக்கே அவர்கள் தங்கள் உளப்பாங்கை உணர்த்த முடியும்.

இத்தகைய தொடர்பின்றி ஒப்பந்தம், சமாதானத்தை வளர்க்கும் பணியில் முன்னேற முடியாது. இன்று நாளை முடியும் பணியல்ல இது.

இவ்வித சந்தர்ப்பத்தை போராளிகளுக்கும் அளிக்க முடியுமானால் இன்றுதடைப்பட்டிருக்கும் புரிந்துணர்வு அதிகரிக்கும். இந்த இருவழிப் பாதை தாமதமின்றித் திறக்கப்படவேண்டும்.

---

தெற்கிலும் துக்கதினம்

# நாடு தீப்பற்றிஎரியும் நிலையில் சுதந்திரக் கொண்டாட்டமா?

## சிறிமா அறிக்கை

(கொழும்பு)

இலங்கையின் நாற்பதாவது சுதந்திரதினக் கொண்டாட்டங்களை எதிர்க்கட்சியான சுதந்திரக் கட்சி பகிஷ்கரித்ததுடன் துக்கதினமாகவும் அனுஷ்டித்தது.

இது தொடர்பாக கட்சியின் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் சுதந்திரதினத்தை துக்கதினமாக அனுஷ்டிக்குமாறு மக்களை கேட்டுக்கொண்டார்.

நாடுதீப்பற்றி எரிந்துகொண்டிருக்கின்றது. ஏழைகள் ஏழைகளாகிக் கொண்டிருக்கிறார்கள். செல்வந்தர்கள் மேலும் செல்வந்தர்களாகிக் கொண்டிருக்கிறார்கள். இந் நிலையில் நாம் எப்படி எமது சுதந்திரத்தைக் கொண்டாட முடியும் என்றும் திருமதி பண்டாரநாயக்கா தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களுடன் தெற்கிலும் இம்முறை சுதந்திரதினம் துக்கதினமாகக் கொண்டாடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

---

# லொறி கடத்தல், உணவுப்பொருள் கொள்ளை குறைகிறது

(யாழ்ப்பாணம்)

வவுனியாவிற்கும் கிளிநொச்சிக்குமிடையில் கடந்த ஒரு வாரகாலமாக லொறிக் கடத்தலோ, உணவுப் பொருள் கொள்ளையோ நடைபெறவில்லை என்று யாழ். வர்த்தக சங்கத் தலைவர் திரு. ஏ. கே. நடராசா தெரிவித்தார்.

கடந்த மாதம் நடந்த கொள்ளைகள் பற்றியும் லொறி கடத்தல்கள் குறித்தும், அமைதிப்படையினரிடம் வர்த்தகர்கள் புகார் செய்திருந்தனர் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த மாதம் 6ம் திகதி நான்கு லொறிகள் கடத்தப்பட்டு உணவுப் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டதாகவும், பின்னர் கடந்த மாதம் 27ம் திகதி 3 லொறிகள் கடத்தப்பட்டு பொருட்கள்கொள்ளையடிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

காடுகளில் அனாதரவாக விடப்பட்டிருந்த வெறும் லொறிகளை சாரதியும், கிளிநரும் மீட்டுவந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

துப்பாக்கியைகாட்டி லொறிகளை மறித்து, பின் கத்தியால் குத்தப் போவதாகக் கூறி சாரதி கிளீனர்களை வீதியில் இறக்கிவிட்டு இனந்தெரியாதவர்கள், உணவுப் பொருட்களுடன் லொறிகளைக் கடத்திச் சென்றதாக சாரதிகள் தம்மிடம் தெரிவித்ததாகவும் அவர் கூறினர்.

கடத்தல் கொள்ளைகள் முற்றாக நிறுத்தப்பட்டால், உணவுப் பொருட்கள் மக்களுக்கு தட்டுப்பாடின்றிக் கிடைக்கும் என்றும் தெரிவித்தார்.

### மாணவர் பொதுக்கூட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ் பல்கலைக்கழக சகல பீட மாணவர்களுக்குமான விசேட பொதுக்கூட்டம் 8ம் திகதி திங்கட்கிழமை காலை வளாகத்தில் இராமநாதன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் அண்மைக் கால சம்பவங்களையடுத்து தடைபட்டிருக்கும் சகலபீடங்களினதும் பரீட்சைகள் குறித்தும் மாணவர்களின் எதிர்காலம் குறித்தும் ஆராயப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[சி]

---

### 3 மாதங்களுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்படவில்லை.

மாதாந்தம் தத்தம் பகுதிகளிலுள்ள உபதபால் அலுவலகங்களுக்குமுன்னால் பலமணித்தியாலக்கணக்கில் நூற்றுக்கணக்கான வறியமக்கள் உதவிப்பணத்துக்காக ஏங்கித் தவங்கிடந்துவிட்டு ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இந்த உதவிப்பணம் தமது ஒரு நேரக்கஞ்சிக்காவதுஉதவி வந்ததாகவும் கடந்த நான்கு மாதங்களாக இப்பணம் வழங்கப்படாததால் தாங்கள் மிகவும் கஷ்டநிலைக்குள்ளாகியிருப்பதாக உதவிப் பணம் பெறுவோர்தெரிவிக்கின்றனர்.

(மா)

### ஆணின் சடலம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சேர்ந்த நா. நடராசா (60 வயது) என்று நேற்று நடந்த மரணவிசாரணையில் அடையாளம் காணப்பட்டது,

யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு. க. கேசவன் மரணவிசாரணை நடத்தினார்.

இறந்தவரின் மனைவி வி. பாக்கியலட்சுமி சாட்சியமளிக்கையில் தொவித்ததாவது;- "இறந்தவா எனது கணவர். முன்னர் கூட்டுறவுப் பரிசோதகராகக் கடமையாற்றினார். இளைப்பாறியபின் தற்போது தனியார் நிறுவனமொன்றில் கணக்காளராகக் கடமையாற்றிவந்தார்."

"4-ம் திகதி இரவு வீட்டில் நானும், இருமகளும், கணவருடன் இருந்தோம். இரவு 11 மணிவரை கணவர் கணக்கு எழுதிக்கொண்டு இருந்தார். நாங்கள் படுத்துவிட்டோம்."

'5-ம் திகதி காலை ஏழு மணிக்கு எழுந்து பார்த்தபோது கணவரைக் காணவில்லை. வழக்கமாகக் கோவிலுக்குச் செல்வார். அன்றும் கோவிலுக்குச் சென்றுவிட்டதாக நினைத்தோம்."

"காலை 9-30 மணியளவில் பால்காரர் ஒருவர் வந்து, எனது கணவர் காயத்துடன் இறந்துகிடப்பதாகச் சொன்னார். பின்னர் சடலத்தை ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர்."

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு, விசாரணை ஒத்திவைக்கப்பட்டது."

---

# மரண அறிவித்தல்

### திரு. வல்லிபுரம் நடராசா

[முத்துத்தம்பி வித்தியாசாலை,
மயிலணி சைவவித்தியாசாலை,
இளைப்பாறிய தலைமை ஆசிரியர்]

வல்லிபுரம் நடராசா 05-02-88ல் காலமாகிவிட்டார். இவர் தில்லைப்பிள்ளையின் அன்புக் கணவரும், சரவணபவான் [கணக்காளர், U. K.], சண்முகானந்தன் [பொறியியலாளர், U. K.], ஸ்காந்தன் [பொறியியலாளர், U. K.], சிறீஸ்காந்தன் [விரிவுரையாளர், சிங்கப்பூர்], சோமஸ்காந்தன் [U. K.], சிவகாமசௌந்தரி, ஆனந்தசௌந்தரி ஆகியோரின் அருமைத் தந்தையும், மீவ், கிருஷ்ணம்பாள் [ஆசிரியை, U. K], மீரா [கணக்காளர், U. K.], கணபதிப்பிள்ளை [இளைப்பாறிய சுகாதாரப்பரிசோதகர்] ஆகியோரின் அன்பு மாமனாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 6-2-88 மாலை 2-00 மணியளவில் திருநெல்வேலி குடும்ப மயானத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு, வேண்டுகிறோம்.

தகவல்: க. பரஞ்சோதி

[சி-2105]

### நாகநாதி நடராஜா

யாழ்ப்பாணம் கோவில் வீதியைச் சேர்ந்த முன்னைநாள் கூட்டுறவு பரிசோதகர் நாகநாதி நடராசா அகால மரணமானார். இவர் பாக்கியலட்சுமியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற திரு. திருமதி நாகநாதி தம்பதிகளின் அன்புப்புதல்வரும், காலஞ்சென்ற ஜீவராசா, திருமதி சிவரஞ்சினி, பாலேந்திரன் (தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்) திருமதி ஜீவமாலா இராஜலிங்கம் (கனடா), செல்வி ஜீவகலா (லண்டன்), செல்வன் ஜீவரூபன் (கனடா), செல்வி ஜீவரூபி ஆகியோரின் அன்புத்தகப்பனும், பாலேந்திரன் (கட்டிடத்திணைக்களம் யாழ்ப்பாணம்), இராஜலிங்கம் [கனடா] ஆகியோரின் மாமனாரும், அபிராவின் அன்புப் பேரனும், ஜெயமணி சின்னத்தம்பியின் சகோதரருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [07-02-88] ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் 174/6, கோவில் வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்; பாலேந்திரன்.

[சி-2109]

---

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1988-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/10036/81. Eelanadu P.O. Box, No,49. Telegram, Eelanadu, Telephone, 22389, 24126.